புதுவை மக்களின் ஒரே நம்பிக்கை காங்கிரஸ்

# புதுச்சேரி காங்கிரஸ் தேர்தல் உறுதிமொழி 2026

## இளைஞர்களின் வேலை வாய்ப்பு உரிமை

**ஒவ்வொரு குடும்பத்திற்கும் உறுதி செய்யப்பட்ட வேலை**

கிராமப்புற மற்றும் நகர்ப்புற **இளைஞர்களுக்கு** வேலை வாய்ப்பையும் நிலையான வருமானத்தையும் உறுதி செய்து, அவர்களின் உரிமைகளை மீட்டெடுக்கும் **தீவிர வேலைவாய்ப்பு திட்டம்.**

வேலையில்லா இளைஞர்களுக்கு **அரசு மற்றும் தனியார் துறைகளில் 30,000 வேலை வாய்ப்புகள்** உருவாக்கப்படும்.

வேலையில்லா பட்டதாரிகள் **+2, ஐடிஐ, டிப்ளோமா, இளநிலை** மற்றும் முதுநிலை படித்தவர்களுக்கு **மாதம் ரூ.2000 உதவித்தொகையாக வழங்கப்படும்.**

## கல்வி உரிமை

**ஆரம்ப கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை இலவசம்**

புதுச்சேரியில் உள்ள அனைத்து மாணவர்களுக்கும் ஆரம்ப கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை இலவசம் முழுமையான இலவச கல்வி வழங்கப்படும்.

அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கு மாதம் **ரூ.2000 உதவித்தொகை** வழங்கப்படும்.

## சுகாதாரத்திற்கு முன்னுரிமை

**குடும்பத்திற்கு ரூ.20 லட்சம் மருத்துவ காப்பீடு**

புதுச்சேரியில் வசிக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் வருடத்திற்கு **ரூ.20 லட்சம் மருத்துவ காப்பீடு வழங்கப்படும்.**

வருடத்திற்கு ஒரு முறை முழுமையான மருத்துவ பரிசோதனை (Master Health Checkup) வழங்கப்படும்.




## உணவிற்கு உத்திரவாதம்

அனைத்து குடும்பங்களுக்கும் மாதம் **ரூ.2500** மதிப்புள்ள மளிகை பொருட்கள் ரேஷன் கடைகள் மூலம் வழங்கப்படும்.

## உங்கள் தங்க மகளுக்கு தங்கம்

தங்கத்தின் விலை உயர்வால் சாமானிய மக்கள் சிரமப்படுகின்றனர். ஆகவே, திருமணம் நடைபெறும் பெண்களுக்கு **தாலிக்கான தங்கம் அரசு மானியமாக வழங்கப்படும்.**

## பெண்களுக்கு இலவச பேருந்து பயணம்

புதுச்சேரி முழுவதும் பேருந்துகளில் பயணிக்கும் **அனைவருக்கும் இலவச பேருந்து சேவை வழங்கப்படும்.**

## அரசு வேலைக்கான வயது தளர்வு திட்டம்

ஆண்கள் மற்றும் பெண்களுக்கு **அரசு வேலை** பெறுவதற்கான வயது வரம்பை தளர்த்தி, **40 வயதாக நிர்ணயிக்கப்படும்**. இதன் மூலம் அரசு வேலைவாய்ப்பை கனவாக நினைக்கும் இளைஞர்கள் பயன்பெறுவார்கள்.

**இந்திய தேசிய காங்கிரசுக்கும் கூட்டணி கட்சிகளுக்கும் வாக்களிக்கவும்! நம்பிக்கை, முன்னேற்றம் & மரியாதையை மீண்டும் கொண்டு வருவோம்.**

கை சின்னத்தில் வாக்களியுங்கள்